Literacy for a Billion

Movie: Thiruttu Payale
Year: 2006

Song: Thai Thaan Thai Thaan
Lyricist: Vairamuthu

தய்யதா தய்யதா தய்ய தய்யதா
பய்யதா பய்யதா பஞ்சு முத்தம்தா
தய்யதா தய்யதா தய்ய தய்யதா
பய்யதா பய்யதா பஞ்சு முத்தம்தா
உயிர் வாழ்கிற வரைக்கும்
உனக்கே மடி கொடுப்பேன்
இனி ஒரு ஜென்மம் இருந்தால்
உனக்கே மீண்டும் பிறப்பேன்
உனது கனவில் நினைவில்
உருவில்
நானே என்றும் இருப்பேன்
தய்யதா தய்யதா தய்ய தய்யதா
பய்யதா பய்யதா பஞ்சு முத்தம்தா
நிலங்கள் உடைந்து போனாலும்
நிழல்கள் உடைவதில்லை
நேசம் பாசம் நிஜமானது
மழையில் கிளிகள் நனைந்தாலும்
சாயம் போவதில்லை
அன்பே நம் காதல் அது
போன்றது
பெண்ணுக்கு பேராசை
வேறொன்றும் இல்லை
சொன்னதை செய்வாளே
மிகை ஏதுமில்லை
நீ உறுதியானவன்
என் உரிமையானவன்
பசி ருசியை பகல் இரவை
பகிர்ந்து கொள்ளும் தலைவன்
தய்யதா
தய்யதா தய்யதா தய்ய தய்யதா
பய்யதா பய்யதா பஞ்சு முத்தம்தா
குங்குமம் அப்பி குளிர்
சாந்தம் மட்டித்து மங்கல
வீதிவலம் செய்து மணநீர்
அங்கு அவனோடு முடன் சென்று
அங்கானைமேல்
மஞ்சன மாட்டக்
கனா கண்டேன் தோழீ நான்
பிறவி வந்து போனாலும்
உறவு முறிவதில்லை
உயிரை உயிரால் முறுக்கேற்றவா
உன்னை போன்ற அன்பாளன்
யார்க்கு வாய்க்கும் மீண்டும்
உடலை உடலால் குளிப்பாட்டவா
ஒரு கணம் நீ என்னை
பிரிந்தாலும் கண்ணா
மறு கணம் நான் உன்னை
சேரும் வரம் வேண்டும்
உன்னை இறுக்கி அணைக்கிறேன்
உயிர் நுழைந்து ரசிக்கிறேன்
அணு அணுவாய் உன்னை
பிளந்து
என் ஆயுளில் அடைப்பேன்
தய்யதா
தய்யதா தய்யதா தய்ய தய்யதா
பய்யதா பய்யதா பஞ்சு முத்தம்தா
உயிர் வாழ்கிற வரைக்கும்
உனக்கே மடி கொடுப்பேன்
இனி ஒரு ஜென்மம் இருந்தால்
உனக்கே மீண்டும் பிறப்பேன்
உனது கனவில் நினைவில்
உருவில்
நானே என்றும் இருப்பேன்
தய்யதா தய்யதா தய்ய தய்யதா
பய்யதா பய்யதா பஞ்சு முத்தம்தா

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.
PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.